மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 234/2025 |
| பெயர் | : | திரு.A.ஜெஸ்லின் (PW-5) |
| த/பெ | : | ஆசிர்வாதம் |
| வயது | : | 35 |
| கிராமம் | : | ஏரல் |
| தாலுகா | : | ஏரல் |
| Calling | : | சார்பு ஆய்வாளர் |

(Accused is present. Petition filed U/s.317 crpc and allowed)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18 th day of March 2026

<u>முதல் விசாரணை</u>

1) நான் தற்போது புதியம்புத்தூர் காவல் நியைத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 21.08.2025 ம் தேதி காலை 09.00 மணிக்கு அ.சா.4 தலைமைக்காவலர் திரு கணேசன் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த குற்ற எண் 246/2025 சட்டப்பிரிவுகள் 296(b), 351(3) of BNS and 4 of TNPHW Act ன் படியான வழக்கை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சண்முகராஜா மற்றும் அய்யப்பன் என்ற ஐசக் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்தேன். பின்பு 11.15 மணிக்கு சம்பவ இடத்தில் குப்பைச் சாக்கில் குத்தி வைத்திருந்த சம்பவத்திற்கு பயன்படுத்திய ஊதா நிறம் கைப்பிடி கொண்ட சில்வர் நிற கத்திரிக்கோல் ஒன்றை மேற்படி சாட்சிகள் சண்முகராஜா மற்றும் அய்யப்பன் என்ற ஐசக் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். பின்னர் சாட்சிகள் சக்தி, மகேந்திரன், சுதந்திரகனி, சண்முகராஜா, அய்பப்பன் என்ற ஐசக் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக்காவலர் கணேசன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2) சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்தும் எனது புலன் விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் எதிரியை தேடி வந்த நிலையில் 21.08.2025 ம் தேதி மதியம் 13.30 மணிக்கு என் முன்னால் ஆஜராக வேண்டி எதிரிக்கு சட்டப்பிரிவு 35(2) BNSS ன் படியான அறிவிப்பு கொடுத்தேன். ஆனால் எதிரியானவர் ஆஜராகவில்லை. எனவே அன்றைய தினம் 14.00 மணிக்கு

தெற்கு காலணிக்கு தெற்கே உள்ள ரோட்டில் வைத்து ஆஜர் எதிரியை காரணம் கூறி கைது செய்து 14.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து உறவினருக்கு தகவல் தெரிவித்து நிலைய பாரா வசம் ஒப்படைத்தேன். பின்பு தக்க வழிக்காவல் மூலம் எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்து PR. Number பெற்றேன்.

3) சாட்சிகள் வாக்குமூலத்திலிருந்தும் எனது புலன் விசாரணையிலிருந்தும் எதிரி மீதான குற்றம் உறுதியானதால் எனது விசாரணையை முடித்து கொண்டு கடந்த 25.08.2025 ம் தேதி சட்டப்பிரிவுகள் 296(b), 351(3) of BNS and 4 of TNPHW Act ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். (**மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் படிவம் 91 அ.சா.ஆ.6 ஆகவும் ஊதா நிறம் கைப்பிடி கொண்ட சில்வர் நிற கத்திரிக்கோல் அ.சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றது.)**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் பட்டியல் சாட்சி –2 கண்ணுற்ற சாட்சியானவர் அ.சா.1 ன் மகன் என்றால் சரிதான். அ.சா.2 சாட்சியானவர் அ.சா.1 ன் உடன்பிறந்த அக்கா என்றால் சரிதான். இவர்களை தவிர கண்ணுற்ற சாட்சியாக வேறு யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அத்தாட்சி சாட்சிகளான சண்முகராஜா மற்றும் அய்யப்பன் என்ற ஐசக் ஆகியோர் எனது விசாரணையில் குப்பை சாக்கில் இருந்து குத்தப்பட்டிருந்த கத்திரிக்கோலை எடுத்து கைப்பற்றபட்டதாக கூறவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியிலும் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி அய்யப்பன் என்ற ஐசக் என்பவர் வேறு தெருவில் வட்டத்தெருவில் வசிக்கிறார் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது தெற்கு காலணி என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக 21.08.2025 ம் தேதி காலை 10.00 மணிக்கு அந்த இடத்திற்கு எதிரி வந்தார் என்பது எனது விசாரணையில் துலங்காதது என்றால் சரிதான். பார்வை மகசரில் சாக்குமூட்டை துலங்கும் என்றால் சரிதான். மேற்படி சாக்கு மூட்டையை நான் கைப்பற்றவில்லை என்றால் தேவையில்லை என்பதால் கைப்பற்றவில்லை. வழக்கின் உண்மைத்தன்மை தெரிந்துவிடும் என்பதால் மேற்படி சாக்குமூட்டையை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகார் மனுவிலோ எனது விசாரணையிலோ எதிரியனாவர் அசிங்கமாக திட்டியதால் அசிங்கமோ அவமானமோ ஏற்பட்டதாக கூறவில்லை என்றால் சரிதான். புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அ.சா.1,

அ.சா.2 மற்றும் பட்டியல் சாட்சி 2 ஆகியோரை எதிரியானவர் கொலை மிரட்டல் செய்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 2 மகேந்திரன் எனது விசாரணையில் அவருடைய சித்தி சுதந்திரக்கனி என்பரை மட்டும் எதிரி கொலை மிரட்டல் செய்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.2 எனது விசாரணையில் தன்னையும் ப.சா.2 யும் எதிரி கொலை மிரட்டல் செய்யதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் அதே ஊரில் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்நதாக சொல்லப்படும் நேரமானது 21.08.2025 ம் தேதி காலை 08.00 மணி என்றால் சரிதான். ஆனால் ஒரு மணி நேரம் கழித்து தான் காலை 09.00 மணிக்கு புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி காலதாமத்திற்கான காரணம் எதுவும் புகார் மனுவிலோ முதல் தகவல் அறிக்கையிலோ கூறவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தின் படி தெற்கு காலணியில் ரோட்டில் எந்தவித சம்பவமும் நடந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்நதாக சொல்லப்படும் இடம் எது என்றால் வாதியின் வீட்டு முன்பு ஆகும். இவ்வழக்கின் அ.சா1 மற்றும் அ.சா.2 ஆகியோர் கையொப்பம் இட்டு கொடுத்த புகார் மனு மறைக்கப்பட்டது என்றும் குற்றச்சம்பவம் எதுவும் துலங்காது என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் விதத்தில் சம்பவ இடம் சென்று பார்வை மகசர் , வரைபடம் தயார் செய்யவில்லை என்றும் சொன்ன விதத்தில் அத்தாட்சி பிறப்பித்து சான்று பொருளை கைப்பற்றவில்லை என்றும் சாட்சிகளை சரிவர விசராணை செய்யவில்லை என்றும் சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் ஒரு தலைபட்சமாக விசாரணை மேற்கொண்டு எதிரி மீது குற்றபப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/– திரு.S.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும்

குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.